# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No. 150/2024

10.02.2026 பி.வா.சா.1 திரு. கணேசன்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என் அப்பாவிற்கு சுப்பையா, நான் மற்றும் மாடசாமி ஆகிய ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். தங்கம்மாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் அத்தை முறை. தங்கம்மாளுக்கு பிராது தபசில் சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தங்கம்மாளுடைய கணவர் அழகுமுத்து என்பவரின் சொத்துகள் தனியாக உள்ளது என்றால் சரிதான். அழகுமுத்து அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துகளில் தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நஞ்சை நிலம் என்றால் சரிதான்.
2. தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட நஞ்சை நிலங்களை நான், சுப்பையா வாதியினுடைய தகப்பனார் மாடசாமி ஆகியோர் பயிர் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் சுப்பையா இறந்த பிறகு அவருடைய மகன் ராமசந்திரனும், வாதியின் தந்தை இறந்த பின்னர் வாதியும் பயிர் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.
3. தங்கம்மாள் குடியிருந்து வருவதாக சொல்லும் காளியம்மன் கோவில் தெரு, மேலகுன்னத்துாரில் உள்ள பகுதியில் தான் நான், வாதி குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். தங்கம்மாள் கடந்த 2014ம் ஆண்டு அவருக்கு பாத்தியப்பட்ட மனையையும் வீட்டையும் எனக்கு ஒன்று, வாதிக்கு, சுப்பையா ஆகியோருக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

4. மேற்படி நஞ்சை நிலங்களில் பயிர் வைத்து அனுபவம் செய்து வரும் அடங்களை வைத்து நானும், சுப்பையா மற்றும் அவரின் வாரிசுகள், வாதி மற்றும் அவரது தகப்பனார் கிராம வங்கியில் கடன் வாங்கி அடைத்து வந்தோம் என்றால் கூட்டுறவு வங்கியில் வாங்கி அடைத்து வந்தோம். தங்கம்மாள் என்வருக்கு படிப்பு அறிவு இல்லை என்றால் சரிதான். தங்கம்மாளும் பொதுவாக அவர் வீட்டில் தான் இருப்பார் வெளியில் போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல ஆரோக்கியமாக இருக்கும் போது வெளியில் செல்வார்.

5. தங்கம்மாளுக்கு பொதுவாக வெளி பழக்கம் இல்லை என்றும் நான் வழக்கிற்க்காக உள்ளது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட நஞ்சை நிலங்களை நானும், சுப்பையா வாதியின் தகப்பனார் அனுபவத்து வந்து தங்கம்மாள் அவர்களுக்கு கட்டுகுத்தகை செலுத்தி வந்தோமா என்றால் பிரதிவாதிகள் தரப்பில் கட்டுகுத்தகை செலுத்தவில்லை நாங்கள் செலுத்துவோம்.

6. வாதி கட்டுகுத்தகை செலுத்தாத காரணத்தால் வாதிக்கும் தங்கம்மாளுக்கும் மன வருத்தம் இருந்து வந்த விவரத்தை என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தங்கம்மாள் உள்ள நஞ்சை நிலத்தில் சர்வே எண் 533 ல் ஒரு பாதியை ராமசந்திரன் அனுபவம் செய்து வந்தார் என்றும் மறு பாதியை வாதி பாலமுருகன் என்பவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். சர்வே எண் 508 யை பாலமுருகன் அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் மாடசாமிக்கு பாகபிரிவினை கொடுப்பதற்கு முன்பு நான் அனுபவம் செய்து வந்தேன். மேற்படி வயலை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல நான் தான் பயிர் செய்து வருகிறேன். தண்ணீர் பாய்ச்சுவதற்காக மட்டும் வாதிக்கு விட்டிருந்தேன்.

7. சர்வே எண் 508 யை நான் பயிர் செய்து வருவதாகவும், தண்ணீர் பாய்ச்சுவதற்காக விட்டிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. சர்வே எண் .508 யை நான் அனுபவம் செய்து வருவதை காட்டுவதற்கு ஏதாவது வருவாய் துறை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் வைத்துள்ளேன். எந்த வருடம் அனுபவம் செய்தததற்கான வருவாய் துறை ஆவணங்களை வைத்துள்ளேன் என்றால் 2021ம் ஆண்டிற்கான ஆவணத்தை வைத்துள்ளேன். 2021 ம் அடங்கலுக்கு முன்பு அல்லது பின்பு என் பெயரில் அடங்கல் இல்லை என்று சொன்னால் சரிதான்.

8. பிவாசாஆ.1 ஆனது தங்கம்மாள் வாதி பாலமுருகனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான் ஆனால் வீட்டை மட்டும் தான் கொடுத்துள்ளார் வயலை எழுதி கொடுக்கவில்லை. தங்கம்மாள் மேலகுன்னத்தூரில் கதவு எண். 3/74ல் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் சரிதான் அது பழைய எண். நான் குடியிருந்து வந்தது 3/160 என்றால் சரிதான் தங்கம்மாளுக்கு அடுத்த வீடாகும். தங்கம்மாள் அவர் வீட்டில் தனிச்சி தான் வாழ்ந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக தங்கம்மாளுக்கு அடுத்த வீட்டில் வாழ்ந்து வந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் வாதியும் மற்றும் சுப்பையாவின் வாரிசுதாரர்கள் தங்கம்மாளுக்கு அருகே உள்ள வீட்டில் வசித்தார்கள் என்றால் சரியல்ல 4, 5 வீடு தள்ளி வசித்தார்கள்.

9. தங்கம்மாளை நான் மட்டும் அவரை பராமரித்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சுப்பையா வாரிசுதாரர்கள் மற்றும் வாதி வகையறாக்களும் பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் யாரும் பார்க்கவில்லை நான் மட்டும் தான் பார்த்து வந்தேன். நான் தங்கம்மாள் பராமரித்து வந்ததாக சொல்வதற்கோ, மருத்துவ உதவி செய்து வந்ததற்கோ ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் ரேஷன் கார்டு, ஆதார் கார்டு எல்லாம் வைத்துள்ளேன். மேற்படி விவரத்தை நான் எதிர்வழக்குரையில் மற்றும்

வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் என்னிடம் கேட்கவில்லை என்பதால் சொல்லவில்லை.

10. பிவாசாஆ.3 ஆன உயில் ஆவணமானது தங்கம்மாள் பிறப்பித்து வைத்தாக சொல்லப்படும் சமயத்தில் நானும், தங்கம்மாள் உடன் போயிருந்தேனா என்றால் நானும் உடன் போயிருந்தேன் எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணத்தில் 1 வது சாட்சியாக எனது மனைவி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் பிறப்பித்து வைத்ததாக சொல்லப்படும் காலம் வரை உயிலில் சொல்லப்படும் சொத்துகள் வாதிகள் வகையறா மற்றும் சுப்பையா வாரிசு நாங்களும் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சர்வே எண். 508 மட்டும் என் வசம் இருந்தது மற்ற சொத்துகளை அனைவரும் அனுபவம் செய்தோம்.

11. உயிலில் கையொழுத்து செய்த மற்றொரு சாட்சி முருகாண்டி என்பவர் எனது உறவுகாரர் என்றால் இல்லை என் ஊர்காரர். உயிலில் கையொப்பம் செய்த மூன்றாவது சாட்சி கோபால் மகன் முருகன் எனக்கு மாமா உறவு முறை என்றால் இல்லை என் ஊர்காரர். 2, 3 வது கையொப்பம் செய்த சாட்சிகள் நான் குடியிருந்து வரும் தெருவில் வசிக்கிறார்கள் என்றால் முருகன் வேறு ஊரில் குடியிருந்தார். அவர் குடியிருந்து கிராமத்தின் பஞ்சாயத்து வேறு. 2 வது சாட்சி என் தெருவில் தான் இருக்கிறார்.

12. 3–வது சாட்சி முருகன் குடியிருந்து வருவது எந்த கிராமம் என்றால் பேட்டை கிராமம், ஞானம்மா கட்டளை பஞ்சாயத்து. 3–வது சாட்சி முருகன் காளியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வரவில்லை என்றால் சரிதான். உயில் பத்திரத்தில் தங்கம்மாள் வந்து கைரேகை வைக்கப்பட்டுள்ளதாக இருந்து வருகிறது என்றால் அவருக்கு படிக்க தெரியாது என்பதால் கைரேகை உள்ளது.

13. தங்கம்மாளுக்கு உயிலில் சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியாது என்றும் அவருக்கு படிப்பறிவு இல்லை என்பதால் அவரை ஏமாற்றி போலியாக உயிலை உற்பத்தி செய்து தங்கம்மாள் அவர்களிடம் இருந்து கைரேகை

பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து கைரேகை வைத்தார். போலியாக தயார் செய்ததாக சொல்வது தவறு.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 10.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.10 18:21:34 +0530

Principal District Munsif,
Tirunelveli.